**தலைப்பு 118 – விவசாய அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 118 - விவசாய அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 08 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 55,007.73 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 53,730.88 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 1,276.85 மில்லியன் அதாவது 2.32 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 53,819.67 | 53,017.92 | 801.75 | 1.49 |
| மூலதன | 1,188.06 | 712.96 | 475.10 | 39.99 |
| மொத்தம் | 55,007.73 | 53,730.88 | 1,276.85 | 2.32 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய விடய இலக்கம் 11801 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 35.50 | 27.53 | 20.58 | 24.68 | 117.00 | 45.36 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழ்வரும் 7002/0000/00/0325/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 35.98 மில்லியனாகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழ்வரும் 04 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.29 மில்லியனாகும் விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0109/000 | 0.10 |
| 6000/0000/00/0013/0030/000 | 3.22 |
| 6000/0000/00/0016/0056/000 | 1.30 |
| 6000/0000/00/0018/0068/000 | 1.67 |
| மொத்தம் | **6.29** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

விவசாய அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,070,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 62 செலவின விடயங்களுக்காக மிகையாக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 5 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

11801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த, ஓய்வுபெற்ற வேலை நீக்கஞ் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,445,939 ஆக இருந்ததுடன் அந்த நிலுவைக் கடன் மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலமாக கொண்டுடவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக விஷேட விவசாய அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 5,393,870 கிரயமான 08 செயற்பாடுகளை அமுல்படுத்தியதன் பின்னர் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி 2015 நவம்பர் 17 ஆந் திகதி அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

#### 3.3.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 யூன் மாதத்தின் போது அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமையால் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

#### 3.3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

கீழே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அமைச்சிற்குச் சொந்தமான 66 வாகனங்கள் 17 வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனத்தின் தன்மை | நிறுவனங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அமைச்சு | 01 | 05 |
| திணைக்களங்கள் | 03 | 07 |
| சபைகள் | 03 | 14 |
| அதிகார சபைகள் | 03 | 18 |
| மாகாண சபைகள் | 01 | 01 |
| கம்பனி | 02 | 15 |
| மாகாண விவசாய | 02 | 02 |
| அபிவிருத்தி நிலையங்கள் | 02 | 04 |
| மொத்தம் | 17 | 48 |

(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துதல்

அமைச்சினால் 16 ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 25 வாகனங்கள் முறையாக கையேற்கப்படாது பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தின் தன்மை | நிறுவனங்களின் எண்ணிக்கை | பெறப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அமைச்சு | 09 | 16 |
| விவசாய அமைப்புக்கள் | 02 | 03 |
| செயற்திட்டங்கள் | 02 | 03 |
| கமநல சேவைகள் | 01 | 01 |
| நிர்மாண நிறுவனங்கள் | 01 | 01 |
| மாவட்ட செயலாளர் | 01 | 01 |
| மொத்தம் | 16 | 20 |

(இ) வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 பெப்ரவரி 21 ஆந் திகதி அமைச்சின் வாகனமொன்று விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் அந்த இழப்பின் பெறுமதி ரூபா 1,782,680 ஆக இருந்தது. அதன் ஆரம்ப பரிசோதனையின் போது சாரதிக்கு எச்சரிக்கை மாத்திரம் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் இன்னொரு வாகனமொன்றில் சாரதியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ii) 2014 திசெம்பர் 24 ஆந் திகதி அமைச்சிற்குரிய வாகனமொன்று விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் உரிய முகவர் நிறுவனம் மதிப்பீடு செய்த நட்டத்தின் பெறுமதி ரூபா 4,322,087 ஆக இருந்தது. சாரதி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியமையினால் காப்புறுதி நிறுவனத்தால் உரிமைகளைச் செலுத்த முடியாததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அமைச்சினால் உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிதோனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1)(அ) | அமைச்சின் வாகனமொன்று 2015 பெப்ரவரி 21 ஆந் திகதி விபத்திற்குட்டதன் பின்னர் ஆரம்ப பரிசோதனை அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த வாகனம் 2016 ஏப்ரல் மாதத்தின் போது மீண்டும் விபத்திற்குட்பட்டதனால் வாகனம் பயன்படுத்த முடியாத நிலைக்குள்ளாகியிருந்தது. 2016 யூன் 08 ஆந் திகதி வரையிலும் அந்த விபத்துத் தொடர்பாக ஆரம்ப பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 104(1)(ஆ) | நட்ட இழப்பின் பெறுமதி ரூபா 500,000 இற்கு மேற்படும் போது நாடு முழுவதும் சேவையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களில் தலைவரை உள்ளடக்கிய சபையொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சின் வாகனமொன்று விபத்திற்குட்பட்டதன் பின்னர் ரூபா 1,782,680 தொகையான நட்ட இழப்பு ஏற்பட்டிருந்தும் அந்த இழப்பு தொடர்பாக பரிசோதனையொன்றை நடாத்துவதற்கு பதிற்கடமை புரியும் நிர்வாக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். |

| | | |
|---|---|---|
| | | அந்த வாகனம் மீண்டும் ஒரு தடவை விபத்திற்குட்பட்டதன் பின்னர் அதன் ஆரம்ப பரிசோதனையை நடாத்துவதற்கு உதவிப் பணிப்பாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். |
| (iii) | நிதிப்பிரமாணம் 757(2)(அ) | 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை**

---

| | | |
|---|---|---|
| (i) | XV ஆவது அத்தியாயத்தின் 5.1 ஆம் பிரிவு | 2015 யூன் 13 ஆந் திகதி முதல் யூலை 27 ஆந் திகதி வரை சீனாவில் நடைபெற்ற Fruit Cultivaation Techniques for Developing Countries 45 நாட்கள் பயிற்சி பாடநெறிக்காக பங்குபற்றிய இரண்டு உத்தியோகத்தர்களினதும் 2015 யூலை 10 ஆந் திகதி முதல் 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரை எகிப்தில் நடைபெற்ற 2 ½ மாத கிராமிய அபிவிருத்திக்கான பயிற்சி பாடநெறிக்காக பங்குபற்றிய இரண்டு உத்தியோகத்தர்களினதும் பயிற்சியின் பின்னர் அரசாங்கத்திற்காக சேவையாற்றுவதற்கான குறித்த காலப்பகுதியைக் குறிப்பிட்டு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | XV ஆம் அத்தியாயத்தின் 10.7 ஆம் பிரிவு | வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக நாட்டிலிருந்து வெளிச் செல்வதற்காக சனாதிபதியிடமிருந்து / பிரதமரிடமிருந்து அங்கீகாரம் பெற்று உடனடியாக உத்தியோகத்தர் அவருடைய சேவையில் உரிய நிர்வாக அதிகாரத்தரப்பினருக்கு அது தொடர்பாக அறிக்கையிட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |

**(இ) சனாதிபதி செயலக சுற்றறிக்கை**

---

| | | |
|---|---|---|
| (i) | 2015 யூன் 29 ஆந் திகதிய எஸ்பீ/2/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | முன்னாள் அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீண்டும் கையேற்கப்பட வேண்டியிருந்த போதிலும், பிரதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்ட வாகனமொன்று மீண்டும் அமைச்சிற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் ஒதுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு மேலதிகமாக அமைச்சருக்காக 02 வாகனங்களும், இராஜாங்க அமைச்சருக்காக 02 வாகனங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. |

**(ஈ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2014 யூன் 14 ஆந் திகதிய 16/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது உத்தியோகத்தரொருவர் அமைச்சின் வாகனமொன்றைச் செலுத்தியிருந்தார். |

**3.6 செயலாற்றல்**

அமைச்சின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது போதியளவில் நிறைவேற்றப்படாத சில பிரதான செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மஹஇலுப்பள்ளம நாற்று மேடையில் விதைகளுக்கான களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்கும் விதை நெல் உற்பத்தியை இயந்திர மயப்படுத்துவதற்காகவும் 2014 யூலை மாதத்தின் போது ரூபா 34.3 மில்லியன் நிதிஏற்பாடு விவசாயத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 11.1 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையில் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த விவசாயக் கிணறொன்றின் நிர்மாணம் மற்றும் 700 மீற்றர் வீதியொன்றிற்கு கிரவல் இடுவதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் வீதிக்கு கிரவல் இட்டு இரண்டு மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும், நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலதிக உணவுப் பயிர் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 12 இன விதைகள் 2015 யூன் 15 ஆந் திகதி அளவில் அனுராதபுரம் மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 09 விதை இனங்கள் விவசாய ஆலோசனையாளர் அலுவலகங்களிற்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளினால் 04 இனங்கள் மீண்டும் அனுப்பப்பட்டிருந்தன. நாற்றுக்கள் தனித்தன்மையாக காணப்படாமை நாற்றுக்கள் பழுதடைந்தமை, பொதுவாக விவசாயிகள் பயன்படுத்துகின்ற உழவு இயந்திரங்களுக்கு ஆணித்துளைகள் இணங்காமை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அமைச்சினால் அவ்வாறான 44 இனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,562,560 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) சேதனப் பசளையைப் பரவலாக்குவதன் மூலம் இரசாயனப் பசளைகளின் பாவனையைக் குறைத்து பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சேதனப் பசளை உற்பத்தி பாவனையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 300 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 251.6 மில்லியன் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 558 கமநல சேவை நிலையங்களை விவசாய தோட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 229 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 18 கமநல சேவை நிலையங்களில் தேவையான இடவசதிகள் இன்மை மற்றும் நீர் பற்றாக்குறையினால் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஏனைய கமநல சேவை நிலையங்களில் இந்த பணிகள் அமுல்படுத்தப்பட்ட போதிலும், செயல்முன்னேற்றம் 29 சதவீதம் வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) கைவிடப்பட்டிருந்த 850 ஏக்கரில் சோதனப்பசளையிட்டு பயிர் செய்வதற்காக ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் 06 மாவட்டங்களில் 684.7 ஏக்கர் காணியில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பருவகாலம் என கருதி மே, யூன் மற்றும் யூலை மாதங்களில் விளைச்சலைப் பெறும் எதிர்பார்ப்பில் மரக்கறி பயிர்ச் செய்கைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் துரித நிகழ்ச்சித் திட்டமொன்றாக நிறைவேற்றப்பட்டமையால் குறித்த மாதிரிகளைத் தயாரித்து விவசாயக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. 25 மாவட்டங்களில் 11,333 க.ஆ.உ.உ வலயங்களுக்கு 566,650 நாற்றுத் தொகுதிகளை பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நாற்றுத் தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு விவசாயக் குடும்பங்கள் விருப்பம் தெரிவிக்காமையினாலும், மேலதிக நாற்றுக்கள் சந்தையில் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டமையினாலும் 360,014 நாற்றுத் தொகுதிகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. நாற்றுக்களை பயிரிட்டதன் பின்னர் பெறப்பட்ட விளைச்சலின் அளவு தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நாற்று மேடையாளர்களுக்கு 2015 நவம்பர் மாதம் வரையிலும் ரூபா 18,489,073 தொகை செலுத்தவேண்டியிருந்தது.

(உ) வணிக ரீதியான நாற்றுமெடைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் உரிய நியதிகளுக்குப் புறம்பாக ரூபா 50,000 இனைவிட கூடிய வருமானம் பெறுகின்ற விவசாயிகள் மற்றும் தற்போதும் வணிக மட்டத்தில் செயற்படுகின்ற எடுக்கின்ற விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டமையால் விவசாயிகளுக்கு குறிப்பிட்ட நேரத்தில் நாற்றுக்கள் வழங்காமை, பாதுகாப்பான வலைகள் குறித்த நேரத்தில் நிர்மாணிக்கப்படாமை போன்ற நலிவுகள் அவதானிக்கப்பட்டன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசொதனையின் போது கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று விவசாயிகளுக்கு ரூபா 1,105,000 தொகையான நலன்கள் ஆண்டின் இறுதிவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாத்தளை மாவட்டத்திற்குரிய கலேவல பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட விவசாயக் கிணறு மற்றும் விசிறும் நீர் முறைமைக்காக கொடுப்பனவு செய்வதற்கு 2015 யூலை மாதத்தின் போது ரூபா 1,360 மில்லியன் மாத்தளை மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. கிணற்றைக் கட்டுவதற்காக தேவையான பொருட்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 3 விவசாயக் கிணறுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த நிதி உதவிகள் மிளகாய் பயிர்ச் செய்கையை மேம்படுத்தவதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்பட்ட தெரிவிற்குரிய எந்தவொரு விவசாயியும் மிளகாய் பயிரிட்டிருக்கவில்லை. நெல், மரக்கறி மற்றும் பழச் செய்கை பயிர்ச் செய்கைக்காக நீர் வழங்கப்பட்டிருந்தது.

(எ) மன்னார் மாவட்டத்தில் பயறு கொள்வனவு செய்வதற்காக ரூபா 6.00 மில்லியன் நிதிஏற்பாடு 2015 செப்தெம்பர் மாதத்தின் போது மன்னார் மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அறுவடைகளைச் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பாக பொருத்தமான திட்டமொன்று அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் ரூபா 6.00 மில்லியனில் ரூபா 1.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், பயறு கொள்வனவு செய்தல் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிரக்கவில்லை.

(ஏ) 118-2-3-20-2502 ஆம் செலவின விடயத்தின் கீழ் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 500 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.ள மீளாய்வாண்டின் போது ரூபா 305 மில்லியன்

செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் செலவின விடயத்திற்குரித்தற்ற ரூபா 14,878,500 அதாவது 4.88 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

**3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

இளம் விவசாய முயற்சியாளர்களின் நிகழ்ச்சித்திட்டத்திற்காக தம்புள்ள பிரதேசப் பிரிவில் நலனாளியொருவருக்கு நான்கு சக்கர உழவு இயந்தரமொன்றை கொள்வனவு செய்வதற்காக 50 சதவீத பங்களிப்பின் கீழ் ரூபா 500,000 வழங்கப்பட்டிருந்தது. இந்த உழவு இயந்திரம் நலனாளியின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்பட்ட தினத்தில் பதிவுச் சான்றிதழ் பரீட்சியின் போது உழவு இயந்திரம் குத்தகைக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டு நிதி பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2015 செப்தெம்பர் 21 ஆந் திகதிய பாரளுமன்ற செயற்குழு முறைமையயை மீளமைத்தல் மற்றும் மேலதிக அலுவலக இடவசதிகளின் தேவைக்காக ‘‘கொவிஜன மந்திர‘‘ கட்டிடத்தை கையேற்பதற்கும், விவசாய அமைச்சை செத்சிறிபாய புதிய கட்டிடத்தில் ஸ்தாபிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. செத்சிறிபாய கட்டிடத்தின் இட அளவு போதியளவில் இல்லாததாக குறிப்பிட்டு போட்டியாளர் விலையினைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது குழுவினால் விலையிடல் தீர்மானிக்கப்படாமல் 05 வருடங்களுக்காக ரூபா 958 மில்லியன் வாடகை செலுத்துவதற்கு இணங்கி எதிர்வுகூறல் இன்றி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

**3.9 சிக்கமனற்ற செலவினங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் மற்றும் அமைச்சரின் கடமை கையேற்றல் என்ற இரண்டு விழாவிற்காக ரூபா 347,700 ஆன சிக்கனமற்ற செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இரணைமடுவில் நடைபெற்ற விவசாயிகள் மற்றும் 2000 உத்தியோகத்தர்களும் மாத்திரம் பங்குபற்றிய ஆரம்ப விழாவிற்கு கெனபி கூடாரம் மற்றும் கதிரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக உணவு மேம்படுத்தல் சபையில் தலைவரினால் பெயர் குறிப்பிடப்பட்ட மூன்று நிறுவனங்களிலிருந்து கூறுவிலை பெறப்பட்டிருந்தது. அந்த கூறுவிலையின் பிரகாரம் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வாத்துவ பிரதேசத்தின் நிறுவனமொன்றிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. கிழக்கு மாகாணத்திற்கு அண்மித்த நிறுவனமொன்றிலிருந்து உரிய சேவையைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படாது போக்குவரத்துச் செலவினத்திற்காக ரூபா 360,000 இனை உள்ளடக்கி ரூபா 2,433,455 தொகை செலவிடப்பட்டிருந்தது. கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஒத்துழைப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

**3.10 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

அமைச்சின் கட்டிடத்தில் தீயணைப்பு முறைமையை மீளமைப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 5,942,150 இற்கு கேள்வி சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஆலோசனைக் கம்பனியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 7,689,500 ஆனமையால் கையளிக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியை விட ரூபா 1,747,250 இனால் குறைவான பெறுமதியாக இருந்தது. இந்த ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் வேலை ஆரம்பிப்பதற்கு ரூபா 1,188,430 தொகை வேலை ஆரம்பித்தல் முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் வேலையை பூர்த்தி செய்யாது ஒப்பந்தத்தைக் கைவிட்டிருந்தார்.

## 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 138 | 105 | 33 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 06 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,359 | 1,079 | 280 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 195 | 127 | 68 | - |
| (v) | அமைய / தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | - | 09 | - | 09 |
| | மொத்தம் | **1,703** | **1,326** | **386** | **09** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய உர செயலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த உதவி பணிப்பாளரின் சம்பளம் 2003 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம் மாற்றீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் SL-I-2006 இன் சம்பள அளவுத் திட்டத்தில் சம்பள படி நிலை வழங்கப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்தும் முன்னர் மேற்கொண்ட சம்பள படி நிலையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தாமல் SL-I-2006 இன் புதிய சம்பள படி நிலையில் வைக்கப்பட்டிருந்தார்.

(ஆ) 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் உதவிப் பணிப்பாளர்கள் SL-I-2006 இன் சம்பளப் படி நிலையில் வைக்கப்பட வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அதற்கு முரணாக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு நிலுவைச் சம்பளமாக ரூபா 1,296,384 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) இந்த உத்தியோகத்தர்களில் அதிகமானோர் தற்காலிக அடிப்படையில் 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளின் போது சேவைக்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2000 ஆகஸ்ட் 01 ஆந் திகதி நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் நியமனத்தை நிரந்தரமாக்கும் போது தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட திகதி காண்பிக்கப்பட்டு முற்திகதியிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு முற்திகதியிடப்பட்டமைக்கான இயலுமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.